**<u>(சார்பு நீதிமன்றம்), பரமத்தி</u>**

**ஓ.எஸ்.எண்.34/2018, 35/2018** **நாள். 20.01.2025**

2025-ம் ஆண்டு ஜனவரி திங்கள் 20-ம் நாள் வாதி தரப்பு 2ம் சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு உறுதிமொழி சட்டப்படி சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

**<u>வா.சா.2 நல்லுசாமி த/பெ. முத்துசாமிகவுண்டர்</u>**

**<u>5ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1) இதற்கு முன்பு சாட்சி சொன்ன மகேஸ்வரன் என்பவர் சொன்ன சாட்சியம் அனைத்தையும்தான் தற்போது நான் சொல்கிறேன் என்றால் சரிதான். எனது பிரமான வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள அனைத்து விவரங்களும், வா.சா.1 மகேஷ்வரன் சொல்லியுள்ள சாட்சியத்தில் உள்ள விவரங்களும் ஒன்றானது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் 2ம் வாதி மகேஷ்வரன் என்பவரின் பொறுப்பில் இருந்தது. 2ம் வாதி பொறுப்பில் ஆவணங்கள் அனைத்தும் இருக்கும்போது, எதற்காக ஆவணங்களை மகேஸ்வரன் தாக்கல் செய்யாமல் நான் தாக்கல் செய்தேன் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியவில்லை.

2) நான் தாக்கல் செய்துள்ள அனைத்து ஆவணங்களும் என்ன என்ன என்று எனக்கு தெரியும். இந்து சமய அறநிலைத்துறையில் இருந்து கொடுக்கப்பட்ட ஆவணங்களில், பரம்பரை தர்மகர்த்தா என்று பெயர் குறிப்பிட்டு உள்ளதா என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியவில்லை. இந்த சமய அறநிலைத்துறையில் 2000-ம் ஆண்டில் கொடுக்கப்பட்ட வா.சா.ஆ.13 ஆவணத்தில் பரம்பரை அறங்காவலர் என்று குறிப்பிடவில்லை என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியவில்லை. வா.சா.ஆ.17 ஆவணத்தில் பரம்பரை அறங்காவலர் என்றும் பெயர் குறிப்பிட்டும், இந்து சமயத்துறையில் இருந்து

மேற்படி ஆவணம் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. ஒவ்வொரு வருடமும் ஆடி மாதம் பால் குடம் எடுக்கும் வழக்கம் என்றால் சரிதான்.

3) 11.08.2000 வருடத்தில் நடைப்பெற்ற பால்குட அபிஷேக அழைப்பிதழான வா.சா.19 மற்றும் வா.சா.ஆ–21–ல் பரம்பரை அறங்காவலர்கள் என்று குறிப்பிடவில்லை என்றாலும், ஊர் பொதுமக்கள், தர்மகர்த்தாக்கள் மற்றும் நிர்வாகஸ்தர்கள் என்று மட்டும்தான் குறிப்பிடப்பட்டள்ளது என்றால் சரிதான். கோவில் நிர்வாகம் என்பது தனி என்றாலும், ஊர் பெரியவர்களை மரியாதை செய்யும் விரமாக தர்மகர்த்தாக்கள் என்று வைத்திருக்கிறார்கள் என்றால் சரியல்ல. இந்து சமய அறநிலைத்துறையில் கொடுக்கப்பட்ட கடிதமான வா.சா.ஆ.28 ஆவணத்தில், பரம்பரை அறங்காவலர் என்ற இடத்தில் கையெழுத்து எதுவும் இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.28 ஆவணமானது செயற்பொறியாளருக்கு அனுப்பப்பட்டது என்பதால், மேற்படி ஆவணம் எனக்கு எப்படி கிடைத்தது என்றால் அதைப்பற்றி எனது அண்ணன் பொன்னசாமிக்குத்தான் தெரியும்.

4) இந்து சமய அறநிலைத்துறை இணை ஆணையர் முன்பு தாக்கல் செய்த O.A.11/2000, O.A.12/2000 ஆகிய வழக்கில், இந்து சமய அறநிலைத்துறை கோவில் நிர்வாகத்தில் தலையிடக்கூடாது என்று பரிகாரம் கோரவில்லை என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. மேற்படி வழக்குகளில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பிற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டு வழக்கில் இந்து சமய அறநிலைத்துறை ஆணையர், எங்களுக்கு எதிராக நாங்கள் பரம்பரை அறங்காவலர்கள் இல்லை என்று பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பின் பேரில், நாங்கள் இந்த வழக்குகளை தாக்கல் செய்துள்ளோம் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. O.A.11/2000, O.A.12/2000 வழக்குகளில் நான் தரப்பினர் இல்லை, என் அண்ணன்தான் தரப்பினராக இருந்தார். என் அண்ணன் 4, 5 வருடங்களுக்கு முன்பு இறந்துவிட்டார்.

5) என் அண்ணனுக்கு பிறகு, நான்தான் தர்மகத்தாவாக இருந்து வருகிறேன் என்று சொல்கிறேன். என் அண்ணனுக்கு திருமணம் ஆகி ஒரு மகன் உள்ளார். அவர் உயிருடன் உள்ளார். வா.சா.ஆ.35–ஆவணத்தில், சென்னை உயர்நீதிமன்றம், விசாரணை நீதிமன்றம் பிறப்பிக்கும் உத்தரவுப்படிதான் நடந்து கொள்ளவேண்டும் என்றும், கோவிலுக்கு தக்கார் நியமிக்கக்கூடாது என்றும் பரிகாரம் வழங்கமுடியாது என்றும் உத்தரவு பிறப்பித்துள்ளது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பால் குட அபிஷேக அழைப்பிதழ்கள் O.A.11/2000, O.A.12/2000 ஆகிய வழக்குகளில் பிறப்பித்த உத்தரவுகளுக்கு பின்னிட்டு ஏற்பட்ட ஆவணங்கள் என்பதால், அதை ஏற்கக்கூடாது என்றால் சரியல்ல.

6) நான் பரம்பரை தர்மகர்த்தா என்பதன் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேனா என்றால் 3ம் தரப்பினர் என்பதன் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேனா என்றல் தர்மகர்த்தா என்ற அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். 1ம் வாதி பொன்னுசாமி எனது சகோதரர். அவர் இறந்தபின்பு என்னை வழக்கில் தரப்பினராக சேர்த்துள்ளார். 1ம் வாதி பொன்னுசாமி தர்மகர்த்தாவாக இருந்து, இறந்துவிட்ட நிலையில், அவரின் மகன்தான் பரம்பரை தர்மகர்த்தாவாக முடியும் என்றாலும், சகோதரர் ஆகிய நான் பரம்பரை தர்மகர்த்தாவாக ஆக முடியாது என்றாலும், எனவே, பரம்பரை தர்மகர்த்தா நிர்வாகிக்கக்கூடிய கோவில் தாவா கோவில் இல்லை என்றால் சரியல்ல.

7) எனது அண்ணன் குடும்பம் தனி குடும்பம், எனது குடும்பம் தனிக்குடும்பம் என்பதால், என் அண்ணன் 1ம் வாதி இறந்துவிட்டபின்பு, என்னை கோவில் தர்மகர்த்தாவாக நியமிக்கவேண்டும் என்று இந்து சமய அறநிலைத்துறையில் நான் வழக்கு தாக்கல் செய்யவில்லை. இந்து சமய அறநிலைத்துறையில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில், நான் தரப்பினராக இல்லாததால், இந்த நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு

நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. இந்து சமயை அறநிலைத்துறையில் தாக்கல் செய்த வழக்கில், இந்து சமய அறநிலைத்துறை கோவில் நிர்வாகத்தில் தலையிடக்கூடாது என்று பரிகாரம் கோராத நிலையில் அது குறித்து இவ்வழக்கில் பரிகாரம் கோரமுடியாது என்றால் சரியல்ல. தாவா கோவில் பரம்பரை தர்மகர்தாக்களால் நிர்வாகிக்ககூடிய கோவில் இல்லை என்றாலும், இந்து சமய அறநிலைத்துறயால் நியமிக்கப்படும், தக்காரால் நிர்வகிக்ககூடிய கோவில் என்றாலும் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால சரியல்ல.

Taken down by me in the open Court and read over to the witness and acknowledged by him /her to be Correct.

S NALINAKUMAR

Digitally signed by S NALINAKUMAR
Date: 2025.01.20 13:02:17 +0530

Sub Judge,
Paramathy